Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.191/2024

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கணேசன் | Occupation | சார்பு ஆய்வாளர் |
| Father's name | செல்லையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2026.

12.06.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முநிகா வைரமணி பணிமாறுதலில் சென்றுவிட்டபடியாலும் வழக்கின் காலதாமதத்தை கருத்தில்கொண்டும் அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.10.2023 ம் தேதி காலை 07.15 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய முநிகா.2902 வைரமணி என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது சொக்கமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.450/2023 பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலையும் புகார் மனுவையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **புகார் மனு அசாஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பை விசாணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

பின்பு இவ்வழக்கினை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.10.2023ம் தேதி காலை 08.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாண்டியராஜ், வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ.4 ஆகவும், வரைபடம் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முநிகா வைரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சாட்சிகள் சொக்கமுத்து, நடராஜன், முனீஸ்வரன், சிவக்கனி, ரவிக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரிந்த படியால் எதிரிகளை கைது செய்ய வேண்டி தேடி வந்த நிலையில் எதிரிகள் 02.10.2023 அன்று 11.30 மணியளவில் திருவில்லிபுத்தூர் ஆத்துக்கடை சந்திப்பு அருகில் வைத்து 2, 3, 4 எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 03.10.2023 அன்று 11.30 மணியளவில் 1ம் எதிரியை திருவில்லிபுத்தூர் சர்ச் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்னர் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் மீனுபிரியா என்பவரை விசாரித்தும் காயச்சான்று பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தேன். **விபத்து பதிவேடு அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே எதிரிகள் மீது பிரிவுகள். 294(b), 323, 324, 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார்மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால்

**சரியல்ல. மேற்படி சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரிகளை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.